## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் - 2015

---

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இவ் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**2.1.1 தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினதும் அதன் துணைக் கம்பனியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.1.2 பணியகம்**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி**

**2.2.1 திரட்டிய நிதிக்கூற்றுக்கள்**

1996 ஏப்ரல் 18 ஆந் திகதிய குறிப்பின் படி அமைச்சரவைப் பத்திர இலக்கம் 96/1019/107/028 இன் மூலம் 1996 ஒக்தோபர் 06 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மூலதனமான ரூபா 100 மில்லியனுடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட பங்கு மூலதனமான ரூபா 5,000,040 தொகையில் ரூபா 5 மில்லியன் பணியகத்தின் முதலீடாகப் பெறப்பட்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரச்சட்டத்தின் 15(உ) பிரிவின் படி பணியகத்திற்கு இலங்கையிலிருந்து வெளியே வேலைவாய்ப்புக்களுக்காக வெளியேறுகின்ற இலங்கையர்களை சேர்த்துக்கொள்வதற்கான அதிகாரம் கிடைத்திருந்ததுடன் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக துணைக் கம்பனியொன்று உருவாக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பணியகத்திற்கு மேலதிகமாக கம்பனியொன்றை உருவாக்கியதன் தேவை தொடர்பில் கணக்காய்வில் சர்சைக்குரியதாக இருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய துணைக்கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 3,510,033 பங்கிலாபத்தை பணியகத்திற்கு பெற்றுக்கொள்ளப்படாமல் அக்கம்பனியின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆகஸ்ட் 14 மற்றும் 2014 பெப்ரவரி 07 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுக்கூட்டத்தின் போது பணியகத்தினால் தனியார் கம்பனிக்கு ரூபா 20 மில்லியன் கடன்தொகை வழங்கப்பட்டிருந்தமை தொடர்பாக ஐயவினாவிற்கு உட்பட்டிருக்கையில் மீண்டுமொருமுறை பணியகத்தினால் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 20 மில்லியன் கடன்தொகை வழங்கியமை கணக்காய்விற்கு சர்ச்சைக்குரிய விடயமொன்றாக இருந்தது.

### 2.2.2 தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல் வாங்கல்கள்

---

2014 ஆகஸ்ட் மாதத்தின் போது பணியகத்தின் மூலம் துணைக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 20 மில்லியன் கடன்தொகை இணங்கப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் செலுத்தப்படாதிருந்ததுடன் 2016 சனவரி 20 ஆந் திகதிய கம்பனியின் தலைவரின் கடிதத்தின் பிரகாரம் நிதிப் பிரச்சினைகள காரணமாக மேலும் செலுத்த வேண்டிய ரூபா 9,000,000 பணத்தை 05 சதவீத வட்டியுடன் மாதாந்தம் ரூபா 250,000 வீதம் 36 தவணைகளில் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகவராண்மையிடமிருந்து மேலும் கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 9,153,340 என இறுதிக் கணக்கின் பிரகாரம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - பணியகம்

---

### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01**

---

ஆதனங்கள், உபகரணங்கள் மற்றும் பொறிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ஊழியர் நலன்புரி நிதியத்திற்குரிய சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07**

---

பின்வரும் விடயங்கள் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்று சமப்படுத்தல் தொடர்பான கணக்காய்வின் போது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த காசுப்பாய்ச்சல் ரூபா 956,209 தொகை கூடுதலாகவும் கிடைத்த வட்டி ரூபா 409,589 மற்றும் முதலீட்டு வருமானம் ரூபா 47,099,267 தொகை குறைவாகவும் முதலீட்டிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சலுக்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) பிற்போடப்பட்ட அரச உதவிகள் மற்றும் மானியங்கள் என்பவற்றிற்குரிய ரூபா 666,058 காலக்கழிவு, ரூபா 2,992,868 ஆன அறவிட முடியாக்கடன், ரூபா 1,633,422 ஆன நிதிக் கட்டணங்கள், ரூபா 4,993,117 ஆன பணிக்கொடை ஒதுக்கீடு மற்றும் ரூபா 563,698 ஆன வட்டி என்பன தொழிற்பாட்டு இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08**

பணியகத்தினால் மீளாய்வாண்டில் முதிர்வடைந்த திறைசேரி பிணை முறி முதலீட்டிற்காக முழு வட்டம் அல்லது கழிவு முதிர்வடைந்த சந்தர்ப்பத்தில் ஒரே தடவையில் முதலீட்டுப் பெறுமதிக்கும் வருமானத்திற்கும் சீராக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் தொடர்பாக நியமித்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12**

பிற்போட்ட வரி சொத்துக்கள் மற்றும் பிரதான வருமான வரிச் செலவினம் தொடர்பாக தேவையான இனங்காணல் மற்றும் வெளிப்படுத்தல்கள் என்பன பணியகத்தினால் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வரி வருமானச் செலவினம் மற்றும் கணக்கீட்டு இலாபத்திற்கு தொடர்பொன்றும் பயன்படுத்தப்பட்ட வரி விகிதம் தொடர்பாக விளக்கமளித்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

(i) பணியகத்தினால் இடம்பெயர் ஊழியர் பயிற்சி நிலையமொன்றை ஹோமகமையில் ஸ்தாபிப்பதற்கு காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2010 ஆம் ஆண்டு ரூபா 26,000,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இக்காணியின் பௌதீக உரித்து பணியகத்திற்கு கையேற்கப்படாதிருந்ததுடன் மேலும் ரூபா 26,000,000 செலுத்தப்பட வேண்டியிருந்தது. முற்பணம் மாத்திரம் செலுத்தியிருந்த இக்காணியை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 இற்கு முரணாக கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 520,000 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், இது தொடர்பாக அவ்வாறு வெளிப்படுத்தலொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றிற்கு பெறுமானத்தேய்வு மேற்கொள்ளும் போது வருடாந்தம் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு முறை மற்றும் பெறுமானத்தேய்வு விகிதம் மாற்றப்பட வேண்டிய போதிலும், வருடாந்தம் அவ்வாறான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமையால் ரூபா 130,881,482 ஆன சொத்துக்களின் தேறிய பெறுமதி மிகவும் குறைந்த பெறுமதியில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு ஆரம்பமானது அதனை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னராக இருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக பணியகத்தினால் சொத்துக்களைப் பெறுமானத்தேய்வு செய்யும் போது கொள்வனவு செய்யப்பட்ட திகதியைக் கருத்திற் கொள்ளாமல் வருடம் பூராகவும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

**(ஊ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

பணியகத்தினால் ரூபா 148,224,223 பெறுமதியான பணிக்கொடைக் பொறுப்புக்கள் அடிப்படையில் முதலீடு தொடர்பாக நியாயமான பெறுமதி சீராக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(எ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20**

அரச மானியங்கள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கை, மானியத்தின் தன்மை மற்றும் அளவு தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

**(ஏ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36**

சொத்தொன்றின் சேதங்களின் கீழ் பெறுமதி ஒப்பீடொன்றோ சீராக்கமொன்றோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஐ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 10,544,625 ஆன அருவச் சொத்துக்கள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் காலக்கழிவு அல்லது அருகல் முறை பின்றப்படாதிருந்ததுடன் அவை தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஒ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 39**

(i) பணியகத்தினால் அட்டுறு வட்டியுடன் திறைசேரி உண்டியல் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பங்களில் உரிய அட்டுறு வட்டி கிடைக்க வேண்டிய வட்டியொன்றாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், முதலீட்டுகட கிரயமாக இனங் காணப்பட்டிருந்தது.

(ii) முதலீடுகளின் பெறுமதி காலக்கழிவு செய்யப்பட்ட பெறுமதியில் (Amortized Cost) காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓமான் தூதுவர் அலுவலகக் கட்டிடத்திற்காக 2013, 2014 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 71,732,940 ஆன பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிவிவகார அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த ஓமான் தூதுவர் அலுவலகக் கட்டிடத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 15,298,560 ஆன வாடகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் வெளிநாட்டு தூதுவர்களுக்குரிய மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 9,983,493 செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த தங்காலை மாவட்ட அலுவலக காணிக்கான உடன்படிக்கையின் பிரகாரம் 2013 நவம்பர் 08 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை தவணைப் பணம் மற்றும் வாடகையாக ரூபா 26,040,000 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அப்பணம் தொடர்பாக எவ்வித ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) நீண்டகால பொறுப்பொன்றாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 3,213,918,952 ஆன குவைட் இழப்பீட்டு நிதிய மீதி மூலதன ஒதுக்கமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு தொழில் முகவரொருவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,476,499 தொகையும் வெளிநாட்டு தொழில் முகவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 11,767 தொகையும் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 374,771 ஆன தொலைபேசிப் பட்டியல் மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அக்கணக்கிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையான சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த இலாபம் ரூபா 945,540 ஆல் கூடுதலாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஆண்டினுள் பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 4,993,117 இற்காக பணிக்கொடை முதலீட்டுக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பணியகத்தினால் ஆயுட்கணிப்பீட்டு மதிப்பீட்டின் பேரில் கணக்கிடப்பட்ட ரூபா 4,993,117 கூட்டுத்தொகையான தற்போதைய ஊழியர் கிரயம் மற்றும் வட்டிக் கிரயம் என்பன கூடுதலாக வருமானக் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஓ) பிற்போடப்பட்ட மானியங்களில் ரூபா 111,533 தொகை ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் வருமானக்கூற்றில் ஏனைய செயற்பாட்டு வருமானத்தின் கீழ் அது ரூபா 666,058 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் ரூபா 554,525 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) கணக்கீட்டு மென்பொருளுக்காக ஆரம்பமாக செலவிடப்பட்ட செலவினம் கற்பனைச் சொத்துக்களாக காண்பிக்கப்படாததன் காரணமாக அச்சொத்துக்கள் ரூபா 13,580,375 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குவைத் இழப்பீட்டு நிதியம் மற்றும் அந்த சொத்துக்களுக்குமிடையே ரூபா 105,202,595 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 06 சொத்துக் கணக்குகளிலும், 02 பொறுப்புக் கணக்குகளிலும் செலவினக் கணக்கொன்றிலும் முறையே ரூபா 26,101,447 தொகை, ரூபா 2,456,125 மற்றும் ரூபா 22,136,639 ஆன வேறுபாடுகள் காணப்பட்டதுடன், அவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பணியகத்தின் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் தொடர்பாக தெரிவுக் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு மற்றும் பணியகத்தின் கணிப்பீட்டிற்கு இடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| விபரம் | பட்டோலையின் பிரகாரம் கணக்காய்வின் போது கணிப்பீடு | பணியகத்தின் கணிப்பீடு | நிதிக்கூற்றுக்களுடனான தாக்கம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான வைப்புக்கள் வட்டி - 2015 (NSB, BOC, Samurdi) | 28,884,060 | 28,452,889 | 431,171 |
| நிலையான வைப்புக்கள் பெறவேண்டிய வட்டி - (NSB, BOC, Samurdi) | 14,920,102 | 14,466,948 | 453,154 |
| நிலையான வைப்புக்கள் பெறவேண்டிய வட்டி - (SMIB) | 1,621,073 | 1,734,069 | 112,996 |

### 2.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்குகள் விடயம் | மீதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| கிடைக்க வேண்டிய விமானப் பிரயாணச்சீட்டுக் கட்டணங்கள் | 812,328 | |
| காப்புறுதி இழப்பீடு | 2,006,745 | |
| கொரியா விசா வைப்புக் கட்டணங்கள் | 31,524,662 | |
| கொரியா டிக்கட் வைப்புக் கட்டணங்கள் | 124,121,275 | |
| நானாவித கடன்கொடுத்தோர் | 1,587,599 | |
| குவைத் காப்புறுதி இழப்பீட்டு வைப்புக்கள் | 15,460 | |
| திருட்டு வர்த்தகங்களை தவிர்க்கும் செயற்திட்டம் | 554,111 | பட்டோலைகள் மற்றும் உறுதிப்படுத்தும் பதிவேடுகள் |
| உணவு வழங்குனருக்கு செலுத்த வேண்டிய பணம் | 16,952,941 | |
| கொரியாவிற்கு மீண்டும் வெளியேறும் கட்டணங்கள் | 1,542,535 | |
| வெளிநாட்டு தூதரகங்களின் பாதுகாப்பு கட்டணங்கள் | 32,411,265 | |
| மீளக் கொண்டு வரும் கட்டணங்கள் | 11,536,835 | |
| அறவிடப்பட வேண்டிய தொலைபேசிக் கட்டணங்கள் | 2,126,675 | |
| | 225,192,431 | |

### 2.3.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.7 பிரிவின் பிரகாரம் திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் மாத்திரம் பணியகத்தின் உத்தியோகத்தர்களுக்காக ரூபா 84,371,445 ஆன வெவ்வேறு படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) யப்பானின் தொழிலாளர் நலன்புரி பிரிவின் தொழிலாளர் நலன்புரி உத்தியோகத்தர் பதவியொன்று அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2012 முதல் 2015 மே வரை அங்கீகரிக்கப்படாத பதவிக்காக ரூபா 11,169,507 கூட்டுத்தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன. யப்பான் தூதரக செலவின பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் 2015 மே மாதம் இறுதியின் போது அந்நியமனம் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 277,132 ஆன மீதியை மீண்டும் பணியகத்தின் வங்கிக் கணக்கிற்கு 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி 2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக மாதாந்த செல்லிடத் தொலைபேசி கட்டணங்களை தீர்வுசெய்யும் போது 2015 யூன் 01 ஆந் திகதி முதல் ரூபா 588,842 ஆன வாடகை பணியகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடியகல்வோரின் முறைப்பாடுகள் / பிணக்குகளை சமரசத்திற்குக் கொண்டு வருவதற்காக முகவர் நிறுவனத்தினால் வைப்புச் செய்யப்பட்டு 6 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 9,980,554 கூட்டுத்தொகையான மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு 2016 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடியகலும் தொழிலாளர்களுக்காக பணியகத்தினால் பேணிச் செல்லப்பட்டிருந்த ஊழியர் சேமலாப நிதிய முறைமை தற்போது செயலற்றுக் காணப்பட்ட போதிலும், 1620 குடியகல்வோரிக்கு உரித்தாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலுள்ளவாறு பணியகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 7,068,901 ஆன பங்களிப்புத் தொகையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 ஆம் ஆண்டின் போது ஈராக்கினால் குவைத் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதனால் அங்கு தொழில் புரிந்த இலங்கையருக்கு ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு இழப்பீட்டை கொடுப்பனவு செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்து எஞ்சியிருந்த ரூபா 3,213,918,952 தொகையை உரிய தொழிலாளர்களுக்கு செலுத்தி முடிப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று பணியகத்தினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) குடிகலும் தொழிலாளர்களுக்காக இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் துணைக் கம்பனிக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 2,884,020 ஆன காப்புறுதி இழப்பீடு குறித்த இழப்பீட்டு உரித்தாளர்களுக்கு விடுவிப்பதற்காக பணியகத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2003 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை வெளிநாட்டு தூதரகங்களின் நலன்புரி பிரிவுகளினால் அறவிட்டு திறைசேரியின் ஊடாக பணியகத்திற்கு அனுப்பப்பட்ட தொழிலாளர் ஒப்பந்த உடன்படிக்கை கட்டணங்களிலிருந்து ரூபா 1,010,548,646 தொகை இன்னும் பொதுத் திறைசேரிக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

(ஊ) 02 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 1,554,566 கூட்டுத்தொகையான கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூபா 12,318,067 தொகையான நிறுத்தி வைத்தல்கள் என்பவற்றை உரிய உரித்தாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கோ அல்லது நி.பி 572(2) இன் பிரகாரம் பணியகத்தின் வருமானத்திற்கு எடுத்து அக்கணக்குகளை தீர்வு செய்வதற்கு 2016 யூன் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 96 வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 944,500 ஆன செஸ் வரி தொகையினை 2016 யூன் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொலைபேசிப் பட்டியல்களை தீர்வுசெய்வதற்குரிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,660,315 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஐ) 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை விமான நிலைய அலகின் மூலம் பணியகப் பதிவினைப் பெற்றுக்கொள்ளும் போது அறவிடக்கூடிய முழுக் கட்டணத்தையும் செலுத்தாத குடியகல்வோரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 670,780 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,473,381 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 2010 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்படாமல் காணப்பட்டது.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | |
| (i) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | பணியகத்தினால் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பினை கணிப்பிடும் போது வாழ்க்கைச் செலவுப் படிகள் கருத்திற் கொள்ளப்படாததன் காரணமாக பரீட்சிக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் மீளாய்வாண்டின் நவம்பர் மாதம் வரை ரூபா 21,607,947 ஆன பங்களிப்புத் தொகை குறைத்து கணிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| (ii) 1982 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் 6(2) ஆம் பிரிவு | சேவையிலிருந்து விலகிச் செல்லும் ஊழியரொருவருக்கு சேவை முடிவுறுத்தப்பட்ட 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டிய போதிலும், 10 உத்தியோகத்தர்களுக்கு உரித்தாக அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயம் | |
| (i) 3.5 ஆம் பிரிவு | 04 உத்தியோகத்தர்களுக்கு 40 சதவீதத்தை விஞ்சி சம்பளக் கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 3.7 ஆம் பிரிவு | கடன்தொகை செலுத்தப்பட்ட திகதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட அளவில் வட்டி அறவிடப்படாததன் காரணமாக ரூபா 279,357 ஆன வட்டி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

(i) நிதிப்பிரமாணம் 371 — செயல்நிமித்த உப கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவுபெற்றிருந்தும் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 8,534,350 ஆன முற்பணத் தொகை கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 770 — 2014 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 223 உடைந்த பொருள் அலகுகள் மற்றும் 2015 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட ரூபா 1,321,160 பெறுமதியான காலாவதியான பொருட்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் 4.2.3 ஆம் பந்தி — பணியகத்தினால் தமது துணைக் கம்பனியின் செயலாற்றலை குறைந்தது 06 மாதங்களுக்கு ஒரு முறை கலந்துரையாடுதல், அரையாண்டு செயலாற்றல் அறிக்கை திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு வழங்குதல் மற்றும் இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட பங்கிலாபத்தை சரியாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏனைய முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 யூலை 28 ஆந் திகதிய பீஈடீ/50 மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் சுற்றறிக்கை — பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் 15 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 912,876 மேலதிக எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2014 நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்ஈ/2015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பந்தி இலக்கம் 08 — தேர்தல்கள் காலத்தில் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ரணவிரு அமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொண்டமைக்காக ரூபா 627,984 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக தொகுதியினதும் அதன் துணைக் கம்பனியினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 356,598,859 தொகை மற்றும் ரூபா 355,700,950 ஆன இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் முறையே ரூபா 450,821,256 மற்றும் ரூபா 413,934,370 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் முறையே ரூபா 94,222,397 ஆலும் ரூபா 58,233,420 ஆலும் வீழ்ச்சியடைந்திருந்தன. மேற்படி வீழ்ச்சிக்காக வருமான வரி சீராக்கம் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வெளித்தரப்பினராலும் பணியகத்தின் உத்தியோகத்தர்களினாலும் பணியகத்திற்கு எதிராக 29 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் 05 வழக்குகளுக்காக பணியகத்தினால் நிகழத்தக்க பொறுப்பொன்றாக ரூபா 375,290 இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறே பணியகத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 95 சதவீதத்திலிருந்து 115 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பணியகத்தின் அதிகாரச்சட்டத்தின் 15 வது பிரிவின் பிரகாரம் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் அனுமதிப்பத்திரமுடைய முகவர் நிலையங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அவற்றிற்கு வசதியளித்தல் மற்றும் இடம்பெயர் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குதல் பணியகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

(அ) மேற்படி நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பாக மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கை பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) முகவர் நிறுவன ஆட்சேர்ப்புக் கட்டணம் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 527,321,250 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 285,109,500 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருமானம் 46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வெளிநாட்டு தொழில் வாய்ப்புக் கட்டளை தொடர்பாக செயற்பாடுகளில் வீழ்ச்சியொன்று இடம்பெற்றிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விபரம் | ஆண்டு | | வீழ்ச்சி சதவீதம் |
|---|---|---|---|
| ---------- | ------------------ | | |
| | 2015 | 2014 | % |
| | --------- | ---------- | --------------- |
| வெளிநாட்டு தொழில் கட்டளைக்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல் | 5632 | 6184 | 9 |
| நிறுவனங்களுக்கு ஊடக விளம்பரங்களுக்காக அங்கீகாரம் வழங்குதல் | 2756 | 3232 | 15 |
| வெளிநாட்டு தொழில் கட்டளைக்காக அங்கீகாரத்தை நீடிப்புச் செய்தல் | 1802 | 3274 | 45 |

(iii) அனுமதிப்பத்திரத்தையுடைய தொழில் முகவர் நிறுவனங்களுக்கு கிடைக்கும் வெளிநாட்டு தொழில் வெற்றிடங்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டில் 343,626 ஆகவும் முன்னைய ஆண்டில் 356,318 ஆகவும் இருந்ததுடன், கிடைக்கும் வெளிநாட்டு தொழில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 3.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் பிரகாரம் வெளிநாட்டு தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக இந்நாட்டிற்கு வருகை தரும் மற்றும் இந்நாட்டிலிருந்து அனுப்பப்படுகின்ற தூதுவர் முகவர்களுக்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 21.34 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அதன் நலன்கள் உச்ச அளவில் இந்நாட்டிற்கு கிடைக்கப் பெற்றிருந்ததா என்பது கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய ஒன்றாக காணப்பட்டது.

(iv) அனுமதிப்பத்திரத்தையுடைய தொழில் முகவர் நிறுவனங்களுடாக ஊழியர்களை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மீளாய்வாண்டில் 117,532 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் 177,012 ஆக இருந்தமையால் அனுமதிப்பத்திரத்தையுடைய தொழில் முகவர் நிறுவனங்களுடாக இடம்பெயர் தொழிலாளர்கள் செல்வது 34 சதவீதத்தினால் குறைவடந்திருந்தது.

(v) மீளாய்வாண்டில் சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பான சுற்றி வளைப்புக்கள் 91 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் சுற்றி வளைப்புக்கள் 138 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சுற்றி வளைப்பு அளவு 34 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் பிரகாரம் பணியகத்தினால் சட்ட விரோத ஆட்சேர்ப்பு தொடர்பில் குறைந்த கவனம் செலுத்தப்பட்டிருந்தமையால் அனுமதிப்பத்திரம் ஒன்றில்லாமல் வெளிநாட்டு தொழில் துறையின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிராக பொது மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை முன்னை ஆண்டை விட அதாவது616 இலிருந்து 805 வரை 31 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

(vi) மத்திய கிழக்கு அல்லாத நாடுகளில் தொழிலை எதிர்பார்ப்பவர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் பயிற்சி பெறுவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 159,807,926 ஆக இருந்த பயிற்சி வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 137,739,805 வரை 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(vii) மீளாய்வாண்டில் தென்கொரியா தொழில் வாய்ப்பிற்காக 5992 தொழில் உடன்படிக்கைகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அச்சந்தர்ப்பங்களுக்காக 4942 ஊழியர்கள் மாத்திரம் வெளியேறியிருந்தனர். அதன் பிரகாரம் 1050 பேருக்காக அதாவது 17.5 சதவீதத்திற்காக தொழில் வாய்ப்புக்கள் இருந்த போதிலும், அத்தொழில் வாய்ப்புக்களுக்காக ஊழியத்தை அனுப்புவதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் அமைந்துள்ள நலன்புரி பிரிவுகளில் பாதுகாப்பு இல்லங்களுக்கு மத்திய கிழக்கு வீட்டுப் பணிப்பெண் சேவையின் போது முகங்கொடுத்த பல்வேறு சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் காரமாக 1065 தொழிலாளர்கள் வந்திருந்தனர். அதில் 832 வெவ்வேறு இன்னல்களின் பேரில் வருகை தந்திருந்ததுடன் அதில் 281 பேர் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பாதுகாப்பு இல்லங்களில் தரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. பணியகத்தினால் முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்படாமலும் பயிற்சி வழங்கலின் பின்னர் தொழிலுக்காக தொடர்புபடுத்தப்படாமையால் வெளிநாடு சென்றவர்கள் பணியகத்திற்கு பொறுப்பாக இருந்து பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருப்பது சிக்கலொன்றாக இருப்பதுடன் இந்நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக பணியகத்தில் செயற்படுத்தப்படும் நடைமுறைகளிலும் கட்டுப்பாட்டு விதிமுறைகளிலும் வெற்றி தொடர்பாக கணக்காய்விற்கு சிக்கலொன்றாக இருந்தது. மேலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சுயாதீன முகவர்களால் அந்நாட்டில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், இவ்வாறு தொல்லைகளுக்கு உட்பட்டு வரும் இலங்கையர்களுக்காக போதியளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக கணக்காய்விற்கு திருப்பதியடைய முடியாதுள்ளது.

(இ) ஊழியர் நலன்புரி நிதியத்தின் கீழும் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் குடிபெயர்ந்தோரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது முறையே 59 சதவீத்தினாலும் 89.9 சதவீதத்தினாலும் அதற்காக ஈடுபடுத்தப்பட்ட பணம் முறையே 19.7 சதவீதத்தினாலும் 90 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தமை செயலாற்றல் அறிக்கை பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒட்டுமொத்தமாக பணியகத்தினால் பாதுகாப்பு இல்லங்களில் தடுத்து வைக்கபட்டுள்ள இடம்பெயர்ந்தோரை இந்நாட்டிற்கு அழைத்து வரும் நடைமுறை உச்ச அளவில் காணப்பட்டதா என கணக்காய்விற்கு சிக்கலானதொன்றாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் தூதுவர் இல்லங்களில் தரித்திருந்த இடம்பெயர்ந்தவர்களுக்காக செலவிடப்பட்ட செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது வெளிநாட்டு பணத்தை ரூபாய்க்கு மாற்றும் பெறுமதி சமாக இருக்கும் அபுதாபி, துபாய், கட்டார், ரியாத் ஆகிய தூதுவர்களால் செலவிடப்பட்ட செலவினம் ஒரு குடிபெயர்ந்தோருக்காக முறையே ரூபா 27,745, ரூபா 61,653 மற்றும் ரூபா 86,344 ஆக இருந்தது. அதன் பிரகாரம் செலவினங்களைப் பகுப்பாய்வு செய்த போது ரியாத்தில் ஒரு குடியகல்வோனிற்காக செலவிடப்பட்ட செலவினங்களில் அசாதாரண நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) பணியகத்தின் சமரச பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பாக பரிசோதித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கிடைக்கப் பெற்றிருந்த 2646 முறைப்பாடுகளுக்கிடையே 994 முறைப்பாடுகளும், 2015 முதல் அரையாண்டினுள் கிடைக்கப்பெற்றிருந்த 2910 முறைப்பாடுகளுக்கிடையே 1867 முறைப்பாடுகளும், 2015 யூன் 30 ஆந் திகதி வரை தீர்வுசெய்யப்படாமல் காணப்பட்டன.

(ii) தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 500 முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம் 75 முறைப்பாடுகளை முறைப்பாட்டாளர்கள் தொடர்ந்தும் செயற்படுத்த தேவையில்லையென குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 55 சந்தர்ப்பங்களில் முறைப்பாட்டாளர் கோவைகளை மூடிவிடுவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தனர். அதன் பிரகாரம் 130 கோவைகளின் முறைப்பாடு செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மாதிரியில் 204 முறைப்பாடுகளுக்கு உரிய குடியகல்வோர் மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு முறைப்பாடுகள் தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன், குடியகல்வுத் தொழிலாளரை இலங்கைக்கு அழைத்துவருவது மாத்திரம் போதுமானதா என்பது தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஊ) பணியகத்தினால் வழங்கப்பட்டிருந்த தரவுகளின் பிரகாரம் குடிபெயர்ந்த ஊழியர்களின் நலன் புரிக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினம் 42 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரை படிப்படியாக குறைவடைந்திருந்ததுடன், பதவியணியினருக்கான செலவிடப்பட்ட நேரடிச் செலவினம் 47 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(எ) தேவைப்பாட்டினை இனங்காணாமல் தினக் குறிப்பேடு அச்சிடப்பட்டமையால் ரூபா 1,163,337 தொகையான கிரயம் மீளாய்வாண்டில் 1898 முகாமைத்துவ தினக் குறிப்பேடுகளும் 2878 சாதாராண நாட்குறிப்பேடுகளும் 2014 ஆம் ஆண்டின் போது 65 முகாமைத்துவ தினக்குறிப்பேடுகளும் எஞ்சிய இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தினால் அச்செலவினம் பயனற்ற செலவினமாக காணப்பட்டது.

(ஏ) 2015 ஆம் ஆண்டில் செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் ஆண்டினுள் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 59.35 மில்லியன் பெறுமதியான 20 செயற்திட்டங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 09 செயற்திட்டங்களும் முழுமையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நிறைவேற்றப்பட்டிருந்த செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 48 சதவீதத்திலிருந்து 85 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கையருக்காக இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் ஊழியச் சந்தர்ப்பங்களை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் பணியகத்தின் இலக்கொன்றாக இருந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும் தெரிவுசெய்யப்பட்ட நாடுகளின் வெளிநாட்டு முகவர்கள், வியாபார உரிமையாளர்களுடன் தொழில் மேம்படுத்தல் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக தேவையான நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கையருக்காக இலங்கைக்கு வெளியே ஊழியச் சந்தர்ப்பங்கள் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் கல்வி நடவடிக்கைகள் ரட்டவிரு பியச செயற்திட்டத்தினூடாக குடியகல்வோரிற்காக வீடமைப்பு நிர்மாணம் அல்லது கடன் வழங்குவதற்கோ 2015 இன் செயல்நடவடிக்கை திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் 06 மாத காலப்பகுதியில் கொரியா தொழில் வேலை வாய்ப்பாளர்களுக்காக மருத்துவ அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு தொடர்புபடுத்தப்பட்ட 6260 குடியகல்வோரில் 2931 பேர் மாத்திரம் இன்சிலப் மருத்துவ நிலையத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன், அது மொத்த குடியகல்வோர் எண்ணிக்கையில் 47 சதவீதமாக இருந்தது. எஞ்சிய குடியகல்வோர் வேறு வைத்தியசாலைகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் பணியகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த மருத்துவ நிலையங்களுக்கு தொடர்புபடுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சமூர்த்தி அதிகாரசபை மற்றும் பணியகத்திற்கு இடையே ஒத்துழைப்புடன் இடம்பெயரும் ஊழியர்களுக்காக ஒன்றிணைந்த வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டமொன்றும் மீண்டும் சம முன்மொழிவு நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் மீளாய்வாண்டினுள் 9103 பேருக்கு ரூபா 2648.11 மில்லியன் கடன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கிடையே 2500 பேரினால் ரூபா 587.1 மில்லியன் கடன் அதாவது 22 சதவீதம் கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 யூன் 30 ஆந் திகதி அளவிலும் வழங்கப்பட்ட கடன் தொகையில் 10 சதவீதம் அறவிட முடியாக்கடனாக இருந்தது. அதன் பிரகாரம் அறவிடுவது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(i) வீடமைப்பு முன்மொழிவு முறைமைக்காக அடிக்கல் நடப்பட்ட சில இடங்களில் உரித்து உறுதிப்படுத்தப்படாதமையால் வீடுகளை நிர்மாணிக்க முடியாமையால் வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பாக ஆரம்ப திட்டமிடல் பலவீனமான நிலைமையொன்றில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2015 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாம் 9450 பேர்களுக்கு வீடுகளை அமைப்பதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் வேலை பூர்த்தியடைந்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை 3412 அல்லது 36 சதவீதமாக இருந்தது.

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் வீடமைப்பு செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது கடன் கொடுப்பனவு செய்யப்படாமையால் அல்லது ஏனைய உரிய செயற்பாடொன்றினால் சமூர்த்தி அதிகாரசபைக்கு ஏற்படும் நட்டமொன்றோ அல்லது செலவினமொன்றோ அது பகிரப்படும் விதத்தில் செயற்படுத்துவதற்கு பணியகம் இணங்கியிருந்த காரணத்தினால் பணியகம் பிணை வைப்பு தொகையிலிருந்தும் அதற்குரிய வட்டித் தொகையிலிருந்தும் அந்நட்டத்தை தீர்ப்பதற்கு நேர்ந்திருந்தது.

(இ) கம்பனியொன்றுக்குரிய ரூபா 95 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான காணியொன்று 99 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக பணியகத்தினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் முற்பணமொன்று மற்றும் தங்காலை, கஹகொல்ல மற்றும் குருணாகல் காணிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக ரூபா 309.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் அக் காணிகளினதும் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு செல்லும் இடம்பெயர் தொழிலாளர்களுக்காக காப்புறுதி முன்மொழிவு திட்டமொன்றை பணியகத்தினால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சி தனியார் கம்பனியுடன் 2012 யூன் 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது, 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ம் ஆண்டு வரை உடன்படிக்கை காலம் முடிவடையும் வரையில் வருடாந்தம் (வரி உட்பட) ரூபா 594,890,103 தொகை பணியகத்தினால் காப்புறுதி தவணையாக ஏஜன்சிக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 முதல் 2015 மார்ச் 28 வரை கஷ்டங்களுக்கும் சிக்கல்களுக்கும் உட்பட்டதன் பேரில் இலங்கைக்கு மீண்டும் அழைத்து வரப்பட்ட 514 குடிபெயர்ந்தோருக்கு பணியகத்தினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 13,355,054 ஆன விமானப் பயணச்சீட்டுக் கட்டணங்கள் ஏஜன்சியால் மீளளிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 195 பேருக்குரிய ரூபா 5,048,597 ஆன கட்டணக் கொடுப்பனவுகளை ஏஜன்சியால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம் குடிபெயர்ந்த ஒருவர் கஷ்டங்களுக்கும் சிக்கல்களுக்கும் உட்பட்டு மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரும் போது செலுத்துவதற்கு நேர்ந்த வரி உட்பட விமானப் பயணச்சீட்டுக் கட்டணத்தை மீள் நிரப்பிக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது ஏஜன்சியால் 140 குடியகல்வோருக்குரிய முழுப்பணத்தையும் மீளளிப்புச் செய்யாமையால் பணியகத்திற்கு ரூபா 922,833 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(iii) பணியகத்தின் செலவில் குடிபெயர்ந்தவர்களை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டிருந்த போதிலும், சில சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு உறவுகள் பிரிவின் மூலம் காப்புறுதி உரித்திற்காக விண்ணப்பிப்பதற்கு முன்னர் உரிய குடிபெயர்ந்தவர் நலன்புரி பிரிவில் காப்புறுதி உரித்திற்காக விண்ணப்பித்து பணத்தைப் பெற்றுக்கொண்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. பிரிவுகளுக்கிடையே முறையான தொடர்பொன்று காணப்படாத காரணத்தினால் 53 குடிபெயர்ந்தோரினால் அவ்வாறு விண்ணப்பித்து பணம் பெற்றுக்கொண்டிருந்தமையால் பணியகத்திற்கு ரூபா 1,071,639 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) காப்புறுதி முன்மொழிவு திட்டத்தின் கீழ் வெளிநாடு செல்லும் குடிபெயர்வோரிற்கு ஏதேனும் காரணத்தின் பேரில் மரணித்தால் அவர்களின் தங்கியிருப்போருக்கு ரூபா 400,000 ஆன இழப்பீட்டுத் தொகையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையில் இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 281 மரணித்த குடியெர்வோரின் தங்கியருப்பாளர்களால் காப்புறுதி இழப்பீட்டிற்காக விண்ணப்பிக்கவில்லையென குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு உரித்தான அண்மித்த வகையில் ரூபா 112,400,000 கூட்டுத்தொகையான இழப்பீடு முறையான அறிவித்தலொன்று இல்லாமல் தங்கியிருப்பவர்களுக்கு செலுத்தாமல் கைவிடப்பட்டிருந்தது, மேலும் மரணித்த 46 குடிபெயர்ந்தோரின் வாரிசுகள் சட்ட பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த அவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 18,400,000 ஆன இழப்பீடு

கணக்காய்வுத் திகதியான 2016 சனவரி 19 ஆந் திகதியிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மரணித்த 42 குடிபெயர்ந்தோரின் கோவைகளில் குறைபாடுகளுடன் கோவையெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இக்குறைபாடுகள் கம்பனி பணியகத்தினால் தொடர்புகொண்டு தீர்வு காணப்பட்டு தங்கியிருப்போருக்கு காப்புறுதி இழப்பீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பணியக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குடியகல்வோரின் நலன்புரி மற்றும் பாதுகாப்பு பொறுப்பேற்றல் பணியகத்தின் ஒரு நோக்காக இருந்ததுடன், குடியகல்வோரின் தங்கி வாழ்வோருக்கு உரிய காப்புறுதி இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் இழப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு முன்வருதல் பணியகத்தின் பொறுப்பொன்றாகும். எனினும் வெளிக் காப்புறுதி நிறுவனங்களில் அக்காப்புறுதி பணத்தை நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் வழங்கப்படாமையால் அவர்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் பணியகம் ஈடுபாட்டுடன் நடவடிக்கை எடுத்துள்ளதாக கணக்காய்வின் போது திருப்தியடை முடியாதுள்ளது.

(இ) பணியக அதிகாரசட்டத்தின் III ஆம் பகுதியின் 17 ஆம் பிரிவின் 3 ஆவது உப பிரிவின் கீழ் பணியக நிதியத்திலிருந்து செலவிட முடியுமென தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும் போது அதற்கு முரணாக பதவியணியினரின் மருத்துவ பட்டியல்களை மீள் நிரப்புதல் மற்றும் திடீர் விபத்து இழப்பீட்டு வழங்கல் திட்டமொன்றுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களின் மருத்துவப் பட்டியல் மீள் நிரப்பலுக்கு ரூபா 35,084,908 செலவிடப்பட்டிருந்தது. பணியகத்தில் பதிவுசெய்து வெளிநாடு செல்லும் குடியகல்வோரிடமிருந்து காப்புறுதி திட்டத்திற்காக கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து காப்புறுதி திட்டத்திற்கு எவ்வித பங்களிப்புத் தொகையொன்றும் அறவிடப்படாமை கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாக இருந்தது. மீளாய்வாண்டின் போது பணியகத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்தும் குடியெர்ந்தோரிடமிருந்தும் முறையே ரூபா 35,070,123 மற்றும் ரூபா 1,190,000 ஆன மருத்துவ பட்டியல் மீள் நிரப்பப்படாதிருந்ததுடன் ஆண்டின் மொத்த மருத்து செலவினத்தில் குடியெர்ந்தோரின் அளவு 3 சதவீதமாக இருந்தது.

(ஈ) இலங்கை வெளிநாட்டு சேவை உறுப்புரை கோவையின் 2.1 ஆம் பந்தி, இலங்கை வெளிநாட்டு சேவையின் அங்கத்தவர்கள் மற்றும் வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்களில் இராஜ தந்திர பதவிகளை வகிக்கும் இலங்கை வெளிநாட்டு சேவையல்லாத அனைத்து உத்தியோகத்தர்களின் விடயத்தில் செல்வாக்குச் செலுத்தியிருந்த போதிலும், அதற்கு முரணாக பணியகத்தினால் வெளிநாட்டு தூதுவர் சேவைக்கு இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக பின்வருமாறு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(i) வெளிநாட்டு அமைச்சினால் தமது நாட்டை அடிப்படையாகக் கொண்ட (Home Based) வதிவிட பதவியணியினருக்காக மாத்திரம் இலங்கையில் அந்த உத்தியோகத்தர்களின் நிரந்தர பதவிக்குரிய மாதாந்த திரட்டிய சம்பளம் (படிகள் இல்லாமல்) அமெரிக்க டொல்களுக்கு மாற்றப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அந்த உத்தியோகத்தர்களுக்கு அனைத்து படிகளுடன் முழுச் சம்பளமும் ரூபாய்களில் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) தூதுவர் அலுவலகங்கள் அமைந்துள்ள நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அடிப்படையில் (Local Based) இலங்கையிலிருந்து அனுப்பிவைக்கப்படும் உத்தியோகத்தர்களுக்காக இலங்கையில் அவர்கள் வகிக்கும் பதவிகளுக்காக சம்பளக் கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்படாததுடன், தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் உப அத்தியாயத்தின் பிரகாரம் தொழிலுக்கு சுய செலவில் வெளிநாடு செல்ல வேண்டியதுடன் உரிய நாட்டில் சேவையில் ஈடுபடுவதற்காக உரித்தாகும் சம்பளம் மாத்திரம் குறித்த உத்தியோகத்தருக்கு உரித்தாகும். எனினும் அதற்கு முரணாக 2013 நவம்பர் 14 ஆந் திகதிய 163/2013 (M-11) ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் ஆண்டின் இறுதியில் மிகையூதியக் கொடுப்பனவு, மாதாந்தச் சம்பளம், சென்றுவதற்கான விமானப் பயணச்சீட்டுக்கள் மற்றும் வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்களில் சேவை புரியும் காலத்திற்குரிய மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(iii) வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்களில் தொழிலாளர் பிரிவுகளில் தமது நாட்டின் அடிப்படையில் (Home Based) சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக மாதமொன்றுக்கு 200 ஐஅ. டொலர்கள் வீதமும் அமைந்துள்ள நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அடிப்படையில் (Local Based) ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களுக்காக மாதமொன்றுக்கு 150 ஐ.அ.டொலர் வீதம் விசேட வாழ்க்கை செலவினக் கொடுப்பனவொன்று 2013 பெப்ரவரி 21 ஆந் திகதி முதல் பணியகத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் பதவியணிக்காக செலுத்தப்பட்டிருந்த 300 ஐ.அ.டொலர் தங்குமிட படிகள் தொடர்பாக 2016 நவம்பர் 17 ஆந் திகதிய டீஎம்எஸ்/0066/வீஎம்எல் I ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2015 மார்ச் வரை குடியெர்ந்தோருக்கு காப்புறுதி நடவடிக்கைகளுக்காக துணைக்கம்பனியால் ரூபா 39,402,347 ஆன மிகையொன்று உழைக்கப்பட்டிருந்தது. மேலும் காப்புறுதி முகவராக செயற்பட்டதற்காக காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட 10 சதவீத தரகாக 2013 திசெம்பர் முதல் 2015 மார்ச் வரை ஏஜன்சியால் ரூபா 51,889,091 தொகை காப்புறுதி கூட்டுத்தாபனத்திலிருந்து மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணியகத்தினால் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையால் மேற்குறித்ததன் பிரகாரம் ரூபா 91,291,438 ஆன வருமானமொன்று பணியகத்திற்கு கிடைக்காமல் போயிருந்தது.

(ஊ) வெளிநாடு செல்வதைப் பதிவு செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய ரூபா 3,200 முகப்புப் பெறுமதியான 100 பாதுகாப்பு முத்திரைகள் காணாமல் போயிருந்தமையால் அதன் மூலம் பணியகத்திற்கு ரூபா 320,000 ஆன வருமானமொன்றை உழைத்துக் கொள்வதற்கு இருந்த வாய்ப்பு கிடைக்காமல் இருந்தது.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் ஹாலிஎல குடியகழ்வு பயிற்சி நிலைய நிர்மாண நடவடிக்கைகளுக்காக பணியகத்தின் அரச நிறுவனங்கள் வசம் காணப்படும் மிகை நிதியை தற்காலிக சேகரிப்பு நிதியம் என்ற கணக்கிலிருந்து ரூபா 57,284,528 செலவிடப்பட்டிருந்ததுடன், அதனை மீள்நிரப்புவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது

அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், உரிய நிதியத்திற்கு அப்பணம் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 சனவரி 24 ஆந் திகதிய 13/0086/544/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானப் பத்திரத்தின் பிரகாரம் குடிபெயரும் ஊழியர்களுக்காக வீடமைப்பு உதவிகள் மற்றும் மீண்டும் சமவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டஙகளை செயற்படுத்துவதற்காக பணியகத்தின் நிதியத்திலிருந்து ரூபா 100 மில்லியன் நிலையான வைப்பொன்றாக சமூர்த்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2013 மார்ச் 08 ஆந் திகதி இலங்கை வங்கியில் சமூர்த்தி அதிகாரசபையின் பெயரில் காணப்படும் நிதி நடவடிக்கைககள் முதலீட்டுக் கணக்கொன்றில் அப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. மேற்படி வைப்பிற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் எவ்வித முதலீட்டு வருமானமும் பணியகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) சர்வதேச தொழிலாளர் அலுவலகத்துடன் இணைந்த செயற்திட்டமொன்றுக்காக பணியகத்தினால் நீண்டகால கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 3,767,965 ஆன மீதியொன்று சர்வதேச தொழிலாளர் அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தொழிலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட மீதிகள் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் அவ்வாறான மீதியொன்று செலுத்த வேண்டி இருக்கவில்லையென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கொன்றில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,484,161 ஆன மீதியொன்று காணப்படுவதாக வங்கி அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், அத்தொகை தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. பணியகத்தினால் சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்களிலும் இம் மீதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்மலான பயிற்சி நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் 2015 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் முச்சக்கர வண்டி வாடகையாக ரூபா 72,770 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிப்பு பரிசோதனையின் பிரகாரம் 7 குடியகல்வோர் பயிற்சி முகாம்களுக்கு வழங்கப்பட்டிருந்த 9 மோட்டார் சைக்கிள்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

(ஆ) மதுகம பயிற்சி நிலையத்திடமிருந்த 01 ஏக்கர் விசாலமான காணி காணப்பட்டதுடன் அக்காணி செயற்திறனான வகையில் பன்பாட்டிற்கு முடியாதிருந்தது.

(இ) பணியகத்தின் குடிபெயர் தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சாத்திய வள ஆய்வொன்றில்லாமல் கேகாலை, பஸ்யாலை, மீகொடை, கல்முனை மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களில் குத்தகை அடிப்படையில் கட்டிடங்களைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அக்கட்டிடங்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்படுவதன் காரணமாக மூடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இப்பயிற்சி நிலையங்களை நடாத்திச் செல்வற்காக மூடிவைக்கப்பட்டிருந்த காலத்தினுள் வாடகை மற்றும் பராமரிப்புச் செலவினமாக ரூபா 35,249,757 தொகை சிக்கனமற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தன.

(ஈ) பணியகத்தினால் குடிபெயர்ந்தோருக்காக நடாத்தப்படும் பயிற்சி பாடநெறிகள் பணியகத்திற்குச் சொந்தமான 03 கட்டிடங்களிலும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட கட்டிடங்களிலும் பயிற்சி நிலையங்கள் மற்றும் விடுதிகளும் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன. 2015 சனவரி முதல் யூன் வரை பயிற்சி நிலையங்களின் நடவடிக்கைகளுக்காக ரூபா 53,228,410 செலவிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 21,758,076 குத்தகை வாடகையாக செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பயிற்சி நிலையங்கள் குறைப்பயன்பாட்டுடன் பயன்படுத்தப்பட்டிருந்தமை பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(i) மாத்தறை மற்றும் சீதுவ விடுதிகளில் 2015 ஆம் ஆண்டின் போது எந்தவொரு பயிலுனரும் வதிவிட பயிற்சிகளைப் பெறாதிருந்ததுடன் மட்டக்களப்பு, யாழ்பாணம், கேகாலை, மாத்தறை, சீதுவ, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய பயிற்சி நிலையங்களில் ஒரு பயிற்சி பாடநெறிக்காக மாத்திரம் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அநுராதபுர விடுதியில் மே முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் எந்தவொரு பயிலுனரும் வதிவிட பயிற்சிகளைப் பெறாதிருந்ததுடன் பதுளை மற்றும் அம்பாறை விடுதிகளில் 2015 சனவரி முதல் செப்தம்பர் வரை 8 இற்கும் 9 இற்கும் இடைப்பட்ட அளவில் மாத்திரம் பயிற்சியளித்தல் இடம்பெற்றிருந்தது.

(ii) 2015 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதியில் மத்திய கிழக்கு (7 நாள்) பயிற்சிப் பாடநெறிக்காக 04 பயிற்சி நிலையங்களில் 24 தடவைகளில் 277 பயிலுனர்களும், மத்திய கிழக்கு (21 நாள்) பயிற்சிப் பாடநெறிக்காக 17 பயிற்சி நிலையங்களில் 145 தடவைகளில் 2371 பயிலுனர்களும் பயிற்சியளிக்கப்பட்டிருந்ததுடன் நிலையங்களில் பயிற்சியளிக்கப்பட்டிருந்த பயிலுனர்களின் சராசரி எண்ணிக்கை 8 முதல் 21 வரையான மிகவும் குறைந்த பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

(iii) 2015 ஆம் ஆண்டில் எவ்வித பயிலுனரும் விடுதியில் தங்கியிருக்காத 2 நிலையங்களில் 63 கட்டில்களும், 154 மெத்தைகளும் காணப்பட்டதுடன், விடுதியொன்றில்லாமல் 04 பயிற்சி நிலையங்களுக்காக 36 அடுக்கு கட்டில்களும் 08 தனிக் கட்டில்களும் 24 இரட்டைக் கட்டில்களும் 14 மெத்தைகளும் காணப்பட்டன. மீளாய்வாண்டினுள் ஒரு பயிற்சி பாடநெறியொன்று மாத்திரம் நடாத்தப்பட்டு 15 பயிலுனர்களை மாத்திரம் பயிற்சியளித்த பதுளை பயிற்சி நிலையத்தில் அடுக்கு கட்டில்களின் அளவிற்கு ஒப்பாக 356 மெத்தைகள் மிகையாக காணப்பட்டதுடன் மத்துகம பயிற்சி நிலையத்தில் வதிவிட பயிலுனர்களுக்காக வழங்கப்பட்டிருந்த 83 நுளம்பு வலைகள் வைத்திருப்பதில் சிக்கல்கள் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவறறுக் காணப்பட்டன.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

தம்புள்ள குடியகல்வோர் வளங்கள் நிலையத்தின் நிர்மாண ஒப்பந்தம் அமைச்சரவையால் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 9,878,224 ஆன மதியுரைக் கட்டணம் ஆனது பணியகத்திற்கு நட்டமாகக் காணப்பட்டது.

**4.7 பெறுகைகள் ஒப்பந்தச் செயற்பாடு**

இரத்தினபுரி நகரில் குடிபெயர்வோர் வளங்கள் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 394,370,184 ஆன ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015 நவம்பர் 29 ஆந் திகதி வேலையைப் பூர்த்தி செய்வதற்கு

நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு திறந்த கேள்வி நடைமுறையில் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 13,840,876 பெறுமதியான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது.

(i) பணியகம் மற்றும் மதியுரை நிறுவனத்துடன் 2012 ஏப்ரல் 10 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட மதியுரை சேவை உடன்படிக்கையின் 2.29 ஆம் பிரிவின் பிரகாரம் வேலைகளின் செயலாற்றலை முடிவுசெய்தல், குறித்த திகதியில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கையளித்தல் போன்றவை தொடர்பாக சேவை வழங்கல் மதியுரைக் கம்பனியால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அச்செயற்பாடுகள் முறைப்படி மேற்கொள்ளப்படாத காரணத்தினால் கணக்காய்வு திகதியான 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டக் காலத்தில் 90 சதவீதம் முடிவடைந்திருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகளில் வேலை 30 சதவீதத்திற்கு அண்மித்த அளவு மாத்திரமே வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) மதியுரை சேவை உடன்படிக்கையின் 1.1.5 பிரிவின் பிரகாரம் ஆரம்ப சாத்தியவள ஆய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மதியுரை சேவை நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மேலதிக வேலைக்காக ரூபா 4,499,354 தொகை முன் அங்கீகாரமொன்று இல்லாமல் பணியகத்தினால் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2014 யூலை 04 ஆந் திகதிய பெறுகைகள் செயற்பாட்டிற்கான பிற்சேர்க்கை இலக்கம் 28 இன் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களில் பெறுகைகள் செயற்பாட்டு வழிகாட்டியிலிருந்து விலகுவதற்காக நிறுவனத்தின் தலைவருக்கு அதிகார எல்லை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக விளம்பர நடவடிக்கைகளுக்காக மாதமொன்றிற்கு ரூபா 3,366,250 வீதம் 04 மாதங்களுக்காக ரூபா 13,465,000 தொகையும் டொங்கல் மற்றும் புராஜெக்டர் கொள்வனவிற்காக ரூபா 1,133,120 பணியகத்தின் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) கொரியா தொழில் பெறுனர்களுக்காக உணவு மற்றும் பானங்களை வழங்கும் உடன்படிக்கை காலம் கடந்ததன் பின்னர் பெறுகைகள் செயற்பாடு பின்பற்றப்படாமல் மீண்டும் வழங்குனரொருவரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த போதிலும், அவ்வப்போது உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டு 2015 யூன் 13 ஆந் திகதி வரை உணவு வழங்கலுக்காக முன்னைய ஒப்பந்தக்காரருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,465,255 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) பெறுகைகள் செயற்பாட்டிற்கான 2014 யூலை 04 ஆந் திகதிய 28 ஆம் இலக்க பிற்சேர்க்கையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களில் பெறுகைகள் செயற்பாட்டு வழிகாட்டியிலிருந்து விலகுவதற்காக நிறுவனத்தின் தலைவருக்கு அதிகார எல்லை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக 3057 ரீ சேர்ட் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,329,073 பெறுமதியான ஒப்பந்தமொன்று தலைவரால் நேரடியாக அரச நிறுவனமொன்றின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த நிறுவனம் குறித்த துறையல்லாத துறையொன்றில் ஈடுபட்டிருந்த நிறுவனமொன்றாக இருந்ததுடன், அதன் காரணமாக பணியகத்தினால் உப ஒப்பந்தங்களை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கல் இடம்பெற்றிருந்தது.

(ii) நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட ரீ சேட்கள் தரமற்றதென கிடைத்த முறைப்பாட்டின் பேரில் மீண்டும் அந்த சேட்கள் மீளப் பெற்றுக்கொண்டு அதற்காக புதிய ரீ சேட்கள் வழங்குவதற்கு வழங்குனர் இணங்கியிருந்த போதிலும், ரூபா 339,768 பெறுமதியான 312 ரீசேட்களுக்காக புதிய ரீசேட்கள் பணியகத்திற்கு கணக்காய்வு திகதியான 2015 ஒக்தோபர் 02 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.7.5 இன் பிரகாரம் ரூபா 10,615,826 பெறுமதியான கொள்வனவு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்வனவுக் குழு நியமனங்களுக்குரிய நியமனக் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் நியமனத்தின் முறையான தன்மை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.

(எ) கதிர்காமத்தில் குடிகல்வோர் வளங்கள் பயிற்சி நிலையமொன்றையும் சுற்றுலா விடுதியொன்றையும் நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் காணி கையேற்கப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கட்டி நிர்மாணத்திற்காக தொழில்நுட்ப குழுவொன்றை நியமதித்தல் நடவடிக்கைகள் மாத்திரம் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்தது. அச்செயற்பாடு தாமதித்ததன் பேரில் பணியகத்திற்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தமை மற்றும் மேலதிக வாடகை கொடுப்பனவின் பேரில் அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு செலவிடப்பட்ட செலவினமொன்றைக் குறைக்கவும் முடியாதிருந்தது.

## 4.8 தாமதமான செயற்திட்டங்கள்

பணியகத்தினால் ரூபா 26,707,353 மதிப்பீட்டு பெறுமதியான கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் முறைமையொன்றைத் தயாரிப்பதற்காக 2015 யூலை 20 ஆந் திகதி அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் முற்பணமாக ரூபா 18,052,303 வீதம் பல வெளிநிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இதற்காக நிதி மதியுரையாளர்களின் ஒத்தழைப்பை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 482,333 செலவிடப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் மாதம் வரையிலும் மென்பொருளின் உத்தேசத்தின் பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பணியகம் தவறியிருந்தது. மேலும் பணியகத்தில் காணப்பட்ட கணக்கீட்டு மற்றும் நிதி அறிக்கையிடல் முறைமை மீளாய்வாண்டிற்காக 08 மாதங்களில் பூர்த்தி செய்யும் இணக்கப்பாட்டுடன் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றுக்கு ரூபா 2,100,000 தொகை 2015 மார்ச் 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் இச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையில் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 4.9 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பணியகத்தின் வளங்கள்

பணியகத்திற்குரிய 03 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டில் சப்ரகமுவ மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

## 4.10 பதவியணியினர் நிர்வாகம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்திற்குரிய பதவியணியினர் விபரம் பின்வருமாறு இருந்தது.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பணியகத்தில் 1230 பேர் நிரந்தர பதவியணியினராக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 1001 ஆனமையால் பதவியணியில் 229 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 20 சாரதிகளும் 31 அலுவலக உதவியாளர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டு 5 ஆண்டுகள் கடந்திருந்த 7 பதவிகளுக்காக 44 உத்தியோகத்தர்கள் மற்றும் மீளாய்வாண்டில் 72 வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் 168 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 08 ஆந் திகதிய டீஎம்எஸ்/1727 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு முரணாக அங்கிகரிக்கப்பட்ட பதவியணியனரை விஞ்சி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 34 ஒப்பந்த ஊழியர்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 6,606,000 தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் மேற்குறித்த கடிதத்தின் பிரகாரம் இடைக்கால படிகளுக்காக ஒப்பந்த ஊழியரொருவருக்கு உரித்து 2015 யூன் 01 ஆந் திகதி முதல் அமுலாகுவதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் 2015 யூன் 01 ஆந் திகதிக்கு முன்னிருந்தே அதாவது சேவைக்கு சேர்ந்த திகதியிலிருந்து இடைக்காலப் படியாக ரூபா 210,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அங்கீகரிக்கப்படாத பதவியொன்றான விமான பிரயாணச்சீட்டு நிறைவேற்றுனர் பதவிக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,345,058 கூட்டுத்தொகையும் மீளாய்வாண்டின் போது ஒரு உத்தியோகத்தருக்காக ரூபா 590,400 கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 மே 22 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 109 உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் பணியகத்தினால் சீராக்கப்படாமையால் அதற்கு பின்னைய ஆண்டின் போதும் அதே குறைபாடுகள் அறிக்கையிடப்பட்டிருந்தமை 02 தூதுவர் அலுவலகங்களுக்குரித்தாக வழங்கப்பட்ட அறிக்கைப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயலாற்றல் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2015 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 59 துறைகளில் 13 துறைகள் தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் தமது இலக்கிடப்பட்ட நோக்கத்திலிருந்து 78 சதவீதம் அடையப் பெற்றிருக்கவில்லை.

(ii) மேவுகை செய்யப்பட்டிருந்த துறைகளுக்காக திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த மனித நாட்கள் அளவு 530 ஆக இருந்தது. அது திரட்டிய பதவியயணியினருக்குரிய 3388 மனித நாட்களில் 16 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது பணியகத்தினால் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 299,220,355 செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 271,784,451 நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. திரட்டிய மூலதனச் செலவினத்தில் 91 சதவீதமான அந்நிர்மாணம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான 04 செலவின விடயங்களில் 122 சதவீதம் முதல் 213,703 சதவீதம் வரையான அதிகரிப்பு மற்றும் 03 செலவின விடயங்களில் 84 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான செலவினக் குறைவும் அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இதற்கு முன்னைய அறிக்கைகள் மூலம் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பாடதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக அறிவூட்டுவதற்காக கம்பஹா மற்றும் கொழும்பில் நடாத்தப்பட்ட பாத யாத்திரைக்காக ஒன்று ரூபா 192 வீதம் கேஸ் நிரப்பிய 3000 பலூன்கள் மற்றும் ஒன்று ரூபா 11,652 பெறுமதியான 30 பெனர்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 925,304 தொகை தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக முறையான கொள்வனவு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளுக்கு உரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன் கொள்வனவுகள் முறையான பிரகாரம் பணியகத்தின் களஞ்சியம் ஊடாக மேற்கொள்ளப்படாமையினால் அந்த பொருள்கள் பணியகத்திற்கு கிடைத்தமைக்கும் சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) 2014 மே 09 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்பை எதிர்பார்ப்பவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கான விளம்பரச் செயற்பாடுகளுக்காக ரூபா 1,713,600 தொகை செலசினே நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டமைக்கான உறுதிப்படுத்தும் எந்த ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹாலிஎல குடியகல்வு வள நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவின் செலவினத்திற்காக தலைவரின் ரூபா 12,612,500 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையிலிருந்து ரூபா 9,157,060 தொகை செலவிடப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 8,048,648 தொகை மாத்திரம் மேற்கூறப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் நிதி அதிகாரக்கையளித்தல் தொடர்பாக நி.பி 135 மற்றும் 2014 பெப்ரவரி 20 ஆந் திகதிய 20.11.15 ஆந் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் தலைவரின் நிதி அதிகார எல்லை ரூபா 2,000,000 ஆன எல்லையை விஞ்சியருந்த போதிலும், ரூபா 12,612,500 ஆன செலவினமொன்று தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் செயல் வழிக்கோவை பின்பற்றப்படாமல் இச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 1981 இன் 15 ஆம் இலக்க ஜனாபதியொருவரை நியமிப்பது தொடர்பான அதிகாரச்சட்டம் மற்றும் 2014 நவம்பர் 22 ஆந் திகதிய பீஆர்ஈ/015/43 ஆம் இலக்க தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்திற்கு முரணாக பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ரட்டவிறு அமைப்பினைப் பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 திசெம்பர் 01 முதல் 2015 சனவரி 31 வரை அமுல்படுத்துவதற்காக பணியத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 116 உத்தியோகத்தர்களுக்கு பதுளை மாகாண அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். கையளிக்கப்பட்ட அந்நிகழ்ச்சிகளுக்காக அந்தக் காலத்திற்காக உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 4,314,111 தொகையும், வாடகை அடிப்படையிலான 10 வாகனங்கள் வழங்கியமைக்காக வாடகைக் கட்டணமாக ரூபா 5,125,824 தொகையுமாக ரூபா 9,439,884 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) மண்சரிவினால் அழிவுக்குட்பட்ட மீரியபெத்த, கொஸ்லந்த பிரதேசத்தில் நாட்டிற்காக உழைத்த குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ரூபா 1,000,000 தொகை பதுளை குடியகல்வோர் வள நிலையத்தில் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு வங்கிக் கட்டளையொன்றின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய தேசிய காப்புறுதி நிதியப் பொறுப்பிற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையினால் காப்புறுதித் தவணைப் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 218,681,760 தொகையில் உள்ளடங்கியுள்ள ரூபா 23,430,210 தொகையான உள்ளீட்டு வரித் தொகையை மீளச் செலுத்துதல் கணிப்பீட்டின் போது கருத்திற் கொள்ளப்படாததன் காரணமாக பணியகம் அந்த அளவிலான வரியைகூடுதலாக கொடுப்பனவு செய்திருந்தது. ஓராண்டிற்கு மேற்பட்ட கால எல்லை கடந்திருந்தமையால் அப்பணத்தை மீளக் கோர முடியாதிருந்ததுடன் அந்நட்டம் தொடர்பாக முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வேலை பூர்த்தி செய்யப்பட்டு பணியகத்திற்கு கையளிக்கப்பட்ட தங்காலை குடியகல்வோர் பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 58,549,800 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,635,915 தொகையான பெறுமதி சேர் வரி நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளீட்டு வரியாக மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அப்பெறுமானத்தினால் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஏ) அபூதாபியில் இலங்கை தூதரகத்தில் பேணப்பட்டு வந்த பணியகத்தின் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் பெண் எழுதுவினைஞர் உத்தியோகத்தரினால் 2014 யூன் 03 முதல் 2014 யூன் 09 ஆந் திகதி வரையான காலத்தில் சேகரிக்கப்பட்ட எமிரேட்ஸ் திர்ஹம் 29,295 தொகையான (அண்ணளவாக ரூபா 1,058,276) பணம், நிதிப்பிரமாணம் 187(3) இன் படி தாமதமின்றி வங்கியிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அந்த அளவினால் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் காசு நிலுவை காணப்பட்டமை தொடர்பாக பணியகத்தினால் முறையாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. மேற்குறித்த காரணம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 165(1) இன் படி கிடைக்கப்பெறும் பணத்தை நிர்ணயிக்கப்பட்ட வகையில் கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கவனத்திற் கொள்வது கடமைக்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தரின் செயற்பாடொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குப் புறம்பாக இருந்தமை மற்றும் முறைப்படி உரிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை கையளிக்காமல் அந்த உத்தியோகத்தர் நலன்புரி பிரிவின் சேவையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருந்தார்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் பணியகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | (i) | பணியகத்தின் வருமானங்கள், செலவினங்கள் முறைப்படி கணக்கேடுகளுக்கு உள்ளடக்கப்பட்டிராமை. |
| | | (ii) | வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் உழைக்கப்படுகின்ற வருமானங்களை சேகரித்தலும் செயற்திறனாக குடியகலும் ஊழியர்களுக்கு அப்பணத்திலிருந்து சேவைகளை வழங்குவதற்காக பயன்பாட்டிற்கு எடுத்தல். |
| (ஆ) | பெறுகைகள் நடைமுறை | | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் கொள்வனவுச் செயற்பாடு இடம்பெறாமை. |
| (இ) | வாகன நிர்வாகம் | | பணியகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் எரிபொருள் எரிவும் வாகன நிர்வாகமும் |
| (ஈ) | பௌதீக மற்றும் மனித வள நிர்வாகமும் | (i) | வெளிநாட்டு வேலை முகவர் நிறுவனங்களின் நடவடிக்கைகளை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்தலும் |
| | | (ii) | பணியகத்திற்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்கள் நிர்வாகவும் பயன்பாடும். |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | | களஞ்சியத்தினால் அடியிதழ்சேர் புத்தகங்களை பாதுகாப்பாக வைத்திருக்காமை. |